# 2023

# ප්‍රගති වාර්තාව
# முன்னேற்ற அறிக்கை
# Progress Report






## මහජන ආරක්ෂක අමාත්‍යාංශය
## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
## Ministry of Public Security

# முன்னேற்ற அறிக்கை
# 2023

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு

14 ஆவது மாடி, சுகுறுபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்ல.

## கௌரவ அமைச்சரின் செய்தி



பொதுச் சேவைகள் வினைத்திறனாகவும், பொதுமக்களுக்கு நட்பான வகையிலும் பராமரிக்கப்பட்டு, போதைப்பொருள் மற்றும் அச்சம் இல்லாத, சட்டப்பூர்வ குடிமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் சமூகத்தை உருவாக்குவது பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் நோக்கமாகும். இலங்கை பொலிஸ், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், அபாயகரமான ஔடதக் கட்டுப்பாட்டுத் தேசிய சபை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் போன்ற விசேட நிறுவனங்கள் இதன் கீழ் செயற்படுகின்றன. அரசாங்கத்தின் கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப நவீன உலகிற்கு ஏற்ற பொருளாதாரக் கொள்கையை உருவாக்கி அரசாங்கத்தின் பிரதான நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இந்த அமைச்சு செயற்பட்டு வருகின்றது. 2023 ஆம் ஆண்டிற்கு அமைச்சு மற்றும் அமைச்சகத்திற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு அரசாங்கம் வழங்கிய நிதி ஒதுக்கீடுகளில் 2023 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றத்தை உள்ளடக்கிய 2024 ஆண்டு பாதீட்டு குழு சபைக்கு முன்வைக்கப்படுகின்ற ''முன்னேற்ற அறிக்கை 2023'' வெளியீட்டில் பொது பாதுகாப்பு அமைச்சராக செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அளிக்கிறது,

அனைத்து நாட்டு மக்களுக்காகவும் பயம், சந்தேகம் அற்ற தேசத்தை உருவாக்கும் போது போதைப்பொருள் தொல்லை, திட்டமிடப்பட்ட குற்றங்கள், கொள்ளைகள், சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் பாலியல் வல்லுறவு போன்றவற்றை சமூகத்திலிருந்து ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் எனது அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விஷேடமான முன்னுரிமையாகும். அத்துடன், நாட்டில் வீதி விபத்துக்கள் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள், அங்கவீனமடைதல் மற்றும் சொத்து இழப்புகளைக் குறைத்து முறையான வாகன பயணக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறுவுதலும் எமது அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முதன்மைக் கருமமாகும். நவீன தொழில்நுட்பத்துடன் டிஜிற்றல் மயமாக்கல் மூலம் வினைத்திறனான மற்றும் தரமான சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கும் தற்போதைய நிலையிலுள்ள வாகன விபத்துக்களைக் குறைப்பதற்கும் தேவையான தந்திரோபாயத் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தனது செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனுடன் செய்து வருவதுடன், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் தனது சேவைகளை வழங்கி தனிப்பட்ட அடையாளம் தொடர்பான பணிகளை செய்து வருகின்றது. ஆபத்தான போதைப்பொருள் துஂபிரயோகத்தைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு ஆதரவை வழங்கி ஆபாயகரமான ஔடத கட்டுபாட்டு தேசிய சபை அதன் சேவைகளை வழங்குகிறது. மேலும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் இலங்கையில் செயற்படும் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களையும் பதிவு செய்வதற்கும், அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்ப செயற்படுகின்றனவா என்பதைத் தீர்மானிப்பதற்கும் பொறுப்பாக செயற்பட்டு வருகின்றது.

பொது மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டில் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்குத் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொது மக்கள் சேவையை வழங்கும் நிறுவன செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுட்டுள்ளன. அந்த காத்திரமான சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான தலைமை வகிக்கும் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும், கௌரவ பிரதமருக்கும் எனது விஷேட நன்றியைத் தெரிவிப்பதுடன், அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அமைச்சின் பணிக் குழுவினர், அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் நிறுவனத் தலைவர்கள் மற்றும் அனைத்து பணிக்குழுவினருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறேன். மேலும், எதிர்காலத்திலும் அமைச்சுக்கான திட்டங்கள் வெற்றியடைவதற்காக உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை உயர்ந்தளவு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

**டிரான் அலஸ்**
பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**செயலாளரின் செய்தி**



இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட 2022 ஏப்ரல் 28 திகதிய இலக்கம் 2277/53, 2022 மே 27 திகதிய இலக்கம் 2281/41, 2022 ஜுலை 22 திகதிய இலக்கம் 2289/43 ஆகிய சுற்றறிக்கைகள் மூலம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களில் 2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளின் சாராம்சத்தை சமர்ப்பித்தல் 2023 வரவு – செலவுத் திட்ட செயற்குழு விவாதத்தில் சமர்ப்பிக்கப்படும் “**முன்னேற்ற அறிக்கை 2022**” வெளியீட்டின் அடிப்படையாகும்.

இந்த அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கருமங்கள் மற்றும் பணிகளை சிறப்பாக நிர்வகித்து விடயத்துக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலின் கீழ் தொடர்புடைய பங்குதாரர் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து 2023 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை திட்டமிடப்பட்ட பல விஷேட கருமங்களை வினைத்திறனாக அமுல்படுத்தக் கிடைத்த வாய்ப்பு நாம் கூட்டாக பெற்ற வெற்றியாகும். உன்னதமான உற்பத்தித்திறனை அடைவதற்காக மனித மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறன் மற்றும் விளைதிறனாக முகாமைத்துவம் செய்து அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் நெறிப்படுத்தப்படுகின்றன.

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் அமைச்சின் எல்லைக்குள் வரும் நிறுவனங்களுக்கு சட்டங்களால் வழங்கப்பட்ட சட்ட விதிமுறைகளின்படி பொது சேவைகளை திறம்பட மற்றும் வினைத்திறனாக செய்வதே அமைச்சின் முதன்மையான பணியாகும். பொதுப் பாதுகாப்பை உறுதி செய்தல், தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல், சமூக விரோத குற்றங்களைத் தடுப்பது, பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான திட்டங்களைத் தயாரித்தல், பயணத்தை எளிதாக்குவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட போக்குவரத்து திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறை அமைப்பு மற்றும் தொடர்புடைய சட்ட அமைப்பை வலுப்படுத்துதல். போதைப்பொருளின் அச்சுறுத்தலில் இருந்து சமூகத்தை விடுவிக்க விசேட பணிகளை மேற்கொள்ளும் ஸ்ரீ லங்கா பொலிஸ், விசேட அதிரடி படை, ஆபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபை இணைந்து போதைப்பொருளில் இருந்து சமூகத்தை விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களமானது குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகளை மிகவும் திறமையாகவும், பொதுமக்களுக்கு நட்பான வகையிலும் மேற்கொள்வதன் மூலம் கடவுச்சீட்டு, வீசா மற்றும் இரட்டைக் குடியுரிமை வழங்கல் தொடர்பான பல பணிகளைச் செய்கிறது. அனைத்து குடிமக்களும் தங்கள் நாட்டில் தங்கள் அடையாளத்தை உறுதி செய்யும் வகையில் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் தனது சேவைகளை வழங்கி அடையாள அட்டை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆபத்தான போதைப்பொருள் துஂபிரயோகத்தைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் தேசிய கொள்கைகளை செயல்படுத்துவதன் மூலம் போதைப்பொருள் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் பாவனையைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் ஆபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபை செயல்படுகிறது. மேலும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பதிவு மற்றும் அத்தகைய நிறுவனங்கள் அரசின் கொள்கைகளுக்கு உட்பட்டு செயல்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்கு அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகம் மேற்கொள்கின்றது.

அத்தகைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு கொள்கைகள், உத்திகள் மற்றும் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும், பின்தொடரவும், மதிப்பீடு செய்யவும் முறையான வழிகாட்டுதலை வழங்கியதற்காக மாண்புமிகு அமைச்சருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அமைச்சுப் பணியாளர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், எதிர்காலத்தில் அமைச்சுக்கான திட்டங்களை வெற்றியடையச் செய்வதற்கு அனைவரும் தங்களின் அதிகபட்ச ஆதரவை வழங்குவார்கள் என நம்புகிறேன்.

**வியானி குணதிலக**
**செயலாளர்**

# பொருளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| **01. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு** | 01 |
| **1.1 அறிமுகம்** | 01 - 04 |
| 1.2 அமைச்சின் காலாண்டு ரீதியான முன்னேற்றம் | 05 - 08 |
| 1.2.1 பொதுமக்களின் குறைகளை விரைவாக தீர்த்துவைப்பதற்காக | 08 |
| 1.2.2 அபிவிருத்தி மீளாய்வு மற்றும் மேற்பார்வை செயற்பாடுகளை மேற்கொண்டு | 09 - 10 |
| 1.2.3 பரஸ்பர ஒத்துழைப்பை பெற்று… | 10 - 11 |
| 1.3 நிதி முன்னேற்றம் | 12 |
| 1.4 அமைச்சின் இடைக்கால இலக்கு | 12 |
| **02. அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்** | 13 |
| 2.1 ஸ்ரீலங்கா பொலீஸ் | 13 |
| 2.1.1 அறிமுகம் | 13 |
| 2.1.2 ஸ்ரீலங்கா பொலீஸின் காலாண்டு ரீதியான முன்னேற்றம் | 14 - 19 |
| 2.1.3 அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் | 19 |
| 2.1.4 நிறுவனம் 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்த எதிர்பார்க்கும் கருத்திட்டங்கள் | 20 |
| 2.1.5 நிறுவனத்தின் இடைக்கால இலக்குகள் 2024 – 2025 | 21 - 22 |
| 2.1.6 நிதி முன்னேற்றம் | 23 |
| 2.2 **விசேட அதிரடிப்படை** | 24 |
| 2.2.1 அறிமுகம் | 24 |
| 2.2.2 விஷேட அதிரடிப்படையின் காலாண்டு ரீதியான முன்னேற்றம் | 25 - 27 |
| 2.2.3 நிதி முன்னேற்றம் | 28 |
| 2.2.4 நிறுவனத்தின் இடைக்கால இலக்குகள் | 28 |
| **2.3 குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்** | 29 |
| 2.3.1 அறிமுகம் | 29 |
| 2.3.2 குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் காலாண்டு முன்னேற்றம் | 29 - 33 |
| 2.3.3 நிதி முன்னேற்றம் | 33 |
| 2.3.4 நிறுவனத்தின் 2024, 2026 இடைக்கால இலக்கு | 34 |
| 2.3.5 சவால்கள் மற்றும் மூலோபாயங்கள் | 35 |
| 2.3.6 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்த எதிர்பார்க்கும் எதிர்கால கருத்திட்டங்கள் | 35 |
| **2.4 ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்** | 36 |
| 2.4.1 அறிமுகம் | 36 |
| 2.4.2 திணைக்களத்தின் காலாண்டு முன்னேற்றம் | 37 - 40 |
| 2.4.3 நிதி முன்னேற்றம் | 41 |
| 2.4.4 நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் விஷேட கருத்திட்டங்கள் | 41 - 42 |
| **2.5 அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகம்** | 43 |
| 2.5.1 அறிமுகம் | 43 |
| 2.5.2 அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகத்தின் காலாண்டு முன்னேற்றம் | 43 - 45 |
| 2.5.3 நிதி முன்னேற்றம் | 45 |
| 2.5.4 நிறுவனத்தின் இடைக்கால இலக்கு | 45 |
| **2.6 அபாயகரமான ஔடதக் கட்டுப்பாட்டுத் தேசிய சபை** | 46 |
| 2.6.1 அறிமுகம் | 46 |
| 2.6.2 அபாயகரமான ஔடதக் கட்டுப்பாட்டு தேசிய சபைின் காலாண்டு முன்னேற்றம் | 47 - 51 |
| 2.6.3 நிதி முன்னேற்றம் | 51 |

# 01. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு

## 1.1. அறிமுகம்

2020-11-20 ஆம் திகதிய 2202/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்ளக பாதுகாப்புத் துறையின் விடயப் பரப்பைத் திருத்தம் செய்து, அமைச்சரவை அமைச்சாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நிறுவப்பட்டது. அந்தத் திகதியிலிருந்து பல சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் விடயப் பரப்பு திருத்தம் செய்யப்பட்டதுடன், அதன் கீழ் அரசின் கொள்கைகளுக்கு ஏற்புடையதாக 2023 ஆம் ஆண்டுக்கென தயாரிக்கப்பட்ட திட்டங்களுக்கு அமைய நாட்டிலுள்ள அனைத்துப் பிரஜைகளும் பயம், சந்தேகம் இன்றி சுதந்திரமாக வாழ்வதற்கு பொருத்தமான சூழலை உருவாக்குதல், குடிமகன் அடையாளத்தை உறுதிப்படுத்துதல், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மக்களுக்கு குடிவரவு மற்றும் குடியகல்வு வேலைகளை எளிதாக்குதல், தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த நாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வலையமைப்பை ஒழுங்குபடுத்துதல் மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை முக்கியமாக அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்ட பிரதானமான பொறுப்பான பயம், சந்தேகமின்றி பிரஜைகள் சுதந்திரமாக வாழ்வதற்கு உகந்த சூழலை உருவாக்குதல், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குடிமகன் அடையாளத்தை உறுதி செய்தல், போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் துஷ்பிரயோகத்தை எதிர்த்துப் போராடுதல் மற்றும் நாட்டில் இயங்கும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி சட்டத்தை மதிக்கும் குடிமக்களின் சமூகத்தை உருவாக்க அமைச்சினால் வழங்கப்படுகின்ற கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதலுக்கிணங்க அனைத்து நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன.

விஷேடமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே ஸ்ரீ லங்கா பொலீஸ் அலுவலர்களின் நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த பதவி உயர்வு மற்றும் பயிற்றுவிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களுக்காக தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் போதுமானளவு வழங்குவதற்கும் விஷேடமாக கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், அதன் மூலம் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் சேவைகளை ஸ்ரீ லங்கா பொலீஸ் ஊடாக நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக, அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களும் பொது மக்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், தனிப்பட்ட அடையாளத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் பொதுச் சேவைகளைப் பராமரிப்பதற்கும் திறமையான மற்றும் பொது நட்புடன் செயல்படுகின்றன. இந்த அமைச்சு நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்து அமுலாக்கங்களைச் சீரமைத்து அமைச்சின் முக்கியப் பணிகளை நிறைவேற்றி அதற்கான கொள்கை வகுத்தல், வழிகாட்டுதல், அமுலாக்கம், கண்காணிப்பு, செயல்திறன் மதிப்பீடு மற்றும் பின்தொடர்தல் நடவடிக்கைகள் ஆகியவற்றைச் செய்து வருகிறது.

**நோக்கு**

“பிரஜைகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பாதுகாப்பான, அமைதியான மற்றும் போதைப்பொருளற்ற இலங்கையை உருவாக்குதல்"

**பணிக்கூற்று**

“குற்றம், பயங்கரவாதம், போதைப்பொருள் ஆகியவற்றின் அச்சுறுத்தலை ஒழித்து சட்டம் மற்றும் சமாதானத்தை நிலைநிறுத்தி சட்டபூர்வமான குடிமக்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் நாட்டை உருவாக்குவதற்கான கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுத்து செயல்படுத்துதல்"

**குறிக்கோள்**

பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான பேரார்வத்துடன் அரசின் கொள்கைகளுக்கு அமைவாக பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பொருத்தமான விஷேடமான முன்னுரிமை கருமங்களை நிறைவேற்றி பொதுமக்கள் நேயமான சேவையை வழங்குதல்.

## நோக்கங்கள்

- பயம், சந்தேகம் இன்றி நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ்வதற்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல் மற்றும் வழிகாட்டுதல்.

- பொலீஸ் சேவையின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக நவீன தகவல் தொழில்நுட்ப கருவிகள் மற்றும் பயிற்சி வழங்குவதன் மூலம் பொலீஸ் அலுவலர்களின் தொழில்வாண்மையை மேம்படுத்துதல்.

- மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பாகப் பேணக்கூடிய வகையில் தீவிரவாதம், பயங்கரவாத செயற்பாடுகள், கொள்ளை, ஆட்கொலை, பாதாள உலக செயற்பாடுகள், போதைப்பொருள் தொல்லையை அழிக்கக்கூடிய வகையில் ஸ்ரீ லங்கா பொலீஸின் புலனாய்வுப் பிரிவு மற்றும் செயற்பாட்டுப் பிரிவைப் பலப்படுத்திப் பேணுதல்.

- ஸ்ரீ லங்கா பொலீஸின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குப் பொருத்தமான திட்டத்தைத் தயாரித்து அந்த செயன்முறை தொடர்பான மேற்பார்வை மற்றும் தொடராய்வு செயன்முறையைப் பலமாகப் பேணுதல்.

- வாகனப் பாவனை மூலம் இடம்பெறும் விபத்துக்கள், அங்கவீனமடைதல் மற்றும் மரணங்களைக் குறைப்பதற்காக வாகன ஒழுங்குபடுத்தலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கு நவீன தொழில்நுட்ப செயலிகள் மற்றும் பாவனையை அறிமுகம் செய்தல்.

- சர்வதேச தரத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனிப்பட்ட அடையாளத்தை உறுதிப்படுத்தும் பின்னணியை அமைத்தல்.

- போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் துஷ்பிரயோகத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பொருத்தமான மூலோபாய திட்டங்களை செயல்படுத்துதல்.

- இலங்கையில் இயங்கும் அனைத்து அரச சார்பற்ற அமைப்புகளையும் பதிவு செய்தல் மற்றும் அரச கொள்கைகளுக்கு அமைவாக அவை செயற்படுதலை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## விஷேட முன்னுரிமைகள்

- பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்தலை இலக்காகக் கொண்டு, ஸ்ரீ லங்கா பொலீஸ் சேவையின் சேவை மட்டத்தை மேம்படுத்துதல்.
- போதைப்பொருள் தொல்லையிலிருந்து சமூகத்தை விடுவிக்கும் செயற்திட்டத்தை சமூக மட்டத்திலும், பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களில் பிள்ளைகள் அரச மற்றும் தனியார் சேவை நிலையங்களை இலக்காகக் கொண்ட செயற்திட்டங்கள், சமய மையங்கள், சமூக அமைப்புகள், அரச மற்றும் தனியார் துறையுடன் அமுல்படுத்துதல்.
- உள்ளக பாதுகாப்பை உறுதி செய்வதனை இலக்காகக் கொண்டு தீவிரவாத மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பாகப் பேணுவதற்காகக் கொள்ளை, ஆட்கொலை, சமூக விரோத செயற்பாடுகள் மற்றும் குற்றங்களைத் தடுத்தல், ஒடுக்குதல்.
- நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளும், விஷேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் சுதந்திரமாக தமது வாழ்க்கையை முன்னெடுப்பதற்குத் தேவையான பாதுகாப்பை எப்போதும் பேணுதல்.
- வாகன பாவனையின் போது வீதிகளில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் வீதி விபத்துக்கள் காரணமாக இடம்பெறும் மரணங்கள், அங்கவீனமடைதல், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுதல் போன்றவற்றைத் தடுத்தல் மற்றும் முறையற்ற மற்றும் கவனமற்ற வாகன செலுத்துகை, ஒழுங்கை மற்றும் வீதி சமிக்ஞைகளை மீறுதல், விஷேடமாக மாநகர பிரதேசங்களில் முறையற்ற வாகன செலுத்துகை மற்றும் வீதியின் இரு மருங்கிலும் வாகனங்களை நிறுத்தி வைப்பதன் காரணமாக ஏற்படும் வீதி நெருக்கடிகளைக் குறைத்து, முறையான வாகன செலுத்துகையை முறைமைப்படுத்தும் வழிமுறை மற்றும் சட்ட ரீதியான வரையறையை அமுல்படுத்துவதற்காகப் போக்குவரத்துப் பொலீஸ் மறுசீரமைக்கப்பட்டு நவீன தொழில்நுட்ப மற்றும் தந்திரோபாயங்களைப் பாவித்து நவீனமயப்படுத்துதல்.
- தேசிய கொள்கை சட்டகத்தினுள் அரச சார்பற்ற அமைப்புகளின் கருமங்களை ஒருங்கிணைத்து நாட்டின் அபிவிருத்தி செயன்முறைகளில் பங்களிப்பு செய்ய வாய்ப்பளித்தல்.
- குடிவரவு மற்றும் குடியகல்வு நிர்வாகத்தை நவீன மற்றும் திறமையான சேவையாக பராமரித்தல்.
- தனிப்பட்ட அடையாளத்தின் உள்ளூர் உறுதிப்படுத்தலை மேற்கொள்ள உறுதிசெய்தல் பின்னணியை உருவாக்கல், நவீன மற்றும் திறமையான சேவையை பராமரித்தல்.
- போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் துர்ப்பிரயோகத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பொருத்தமான மூலோபாய திட்டங்களை செயல்படுத்துதல்.

## 1.2. அமைச்சின் காலாண்டு ரீதியான முன்னேற்றம்

- **மனித வள அபிவிருத்தி**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் விடயப்பரப்பின் விரிவாக்கத்துடன், 329 பேர் கொண்ட பணியாளர்கள் 01.04.2023 அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி, 236 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதில் 196 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அபாயகரமான ஔடதக் கட்டுப்பாட்டுத் தேசிய சபைக்கு நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, அமைச்சின் மொத்த பணியாளர்கள் 133 ஆகவும், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதிக்குள் மொத்த பணியாளர் தேவையில் 95மூ பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அமைச்சின் பொறுப்புகள் அதிகபட்ச வினைத்திறனுடன் பேணப்பட்டு வருகிறது.

- **பாடநெறிகளுக்கான இணைப்புகள்...**

அமைச்சின் நோக்கத்தை அடைய ஊழியர்களுக்கு தேவையான அறிவு, மனப்பான்மை மற்றும் திறன்களை வளர்ப்பதற்கு பயிற்சி அவசியம். அதன்படி அறிவு, மனப்பான்மை, திறன் மற்றும் நேர்மறை சிந்தனையை வளர்ப்பதற்கான பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளில் அமைச்சின் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். அமைச்சின் உத்தியோகத்தர்களின் திறன் அபிவிருத்திக்காக உள்நாட்டில் பயிற்சி வழங்கும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து 03 நிர்வாக அதிகாரிகளுக்கு பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 09 உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 31 உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழி பாடநெறி பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

அமைச்சின் அதிகாரிகளுக்கு விடய ரீதியான வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் கிடைக்காத நிலையில் அந்த வாய்ப்பை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

- **விசேடமான பணிகளின் முறையான ஆரம்பத்திற்காக...**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களில் இடம்பெறும் கருமங்களை முறையாகவும், வெளிப்படைத் தன்மையாகவும் சட்ட வரையறைக்குள் மேற்கொள்வதற்காக மனித வள விருத்தி, நலன்புரி செயற்பாடுகளை மேம்படுத்துதல், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி போன்ற பல்வேறு கருமங்களை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வுக் காலத்தில் 30 அமைச்சரவைப் பத்திரங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அந்த பத்திரங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் விதந்துரைகளுக்கு அமைய அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கருமங்களை முறையாக மேற்கொள்வதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **போதைப்பொருள் பாவித்த சாரதிகளை அடையாளம் காண்பதற்கான பரிசோதனைத் தொகுதிகள்...**

போதைப்பொருளைப் பாவித்து வாகனம் செலுத்துதல் காரணமாக நாளாந்தம் அதிகரிக்கும் பாரிய விபத்துக்களால் இடம்பெறும் மரணங்களின் எண்ணிக்கையை இயன்றளவு குறைத்து, போதைப்பொருள் பாவித்து வாகனம் செலுத்துவதனைத் முழுமையாக தடுக்கும் நோக்கத்துடன் சாரதிகளை உடனடியாக பரிசோதித்துப் போதைப்பொருளைப் பாவித்து வாகனம் செலுத்துவோரை அடையாளம் கண்டு, சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக கருத்திட்டமொன்று மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டுச் சபை ஊடாக பரிசோதனைத் தொகுதிகளைப் பெறுவதற்காக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை நிதியத்திலிருந்து 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பரிசோதனைத் தொகுதிகள் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுடன் இணைந்துஸ்ரீ லங்கா பொலீஸிற்கு வழங்கப்பட்டதுடன் தேர்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் பரிசீலனை நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவடைந்த பின்னர் இதன் இரண்டாவது கட்டம் 2023.09.06 ஆந் திகதி ஸ்ரீ லங்கா பொலீஸுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளது. தற்போது அப்பரிசோதனை தொகுதிகளை பயன்படுத்தி ஸ்ரீ லங்கா பொலீஸ், அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டுச் சபை உள்ளிட்ட அதனோடு தொடர்புடைய தரப்பினரின் ஒத்துழைப்புடன் நேர்த்தியான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **ஸ்ரீ இலங்கையில் சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் வற்புறுத்தலை ஒழித்து…**

சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் தவறாக நடத்துதலை ஒழிப்பதற்காக நிரந்தரமான தீர்வை வழங்கும் நோக்கத்துடன் ஸ்ரீ லங்கா பொலீஸ் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக செயற்படும் அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்த பொறிமுறையை உருவாக்குதல் இதன் நோக்கமாகும். இதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, நீதி அமைச்சு, ஸ்ரீ லங்கா பொலீஸ், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய ஏனைய பிரிவுகளையும் இணைத்து சிறுவர் துஸ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான தீர்மானங்களை மேற்கொண்டு, அவை தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விசேடமாக பாடசாலைகளில் முறைப்பாட்டுப் பெட்டியை முறையான முறைமையின் கீழ் பராமரிப்பது, இப்பொறுப்பை சமூக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் மற்றும் பாடசாலை மட்டத்தில் 1929 அவசர தொலைபேசி சேவையை பிரபலப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் கல்வி அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **எதிர்கால தலைமுறையைப் போதைப்பொருள் தொல்லையிலிருந்து விடுவிப்பதற்காக…**

போதைப்பொருள் தொல்லையை ஒழிக்கும் புதிய அரசின் கொள்கைக்கு அமைவாக நாட்டில் மிகவும் வேகமாக பரவிவரும் போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதற்கும், அதற்கு அடிமையாகும் இளம் தலைமுறையினர் மற்றும் பாடசாலை மாணவர்களையும் அந்த தொல்லையிலிருந்து விடுவிப்பதற்குப் பொருத்தமான தீர்வை வழங்குவது இதன் நோக்கமாகும். இதற்கான செயற்திட்டங்களை அமுல்படுத்தவதற்காக கல்வி அமைச்சு, ஸ்ரீ லங்கா பொலீஸ் மற்றும் அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டுச் சபையுடன் ஒன்றிணைந்து தொடர்ச்சியாக பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விசேடமாக இதற்காக அதிகாரிகளுக்கு பயிற்சியளித்தல், பாடசாலை மாணவர்களுக்கும் இளைஞர் சமுதாயத்தினருக்கும் முறையான ஆலோசனை நிகழ்ச்சிகளை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரிவுகளின் எல்லை நிர்ணயம் செய்தல்…**

நிர்வாக மாவட்ட மற்றும் மாகாண எல்லைகள் பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரிவு பிரதேச எல்லைகளுடன் ஒத்துப்போகாத சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு அந்த எல்லை நிர்ணய பிரச்சினைகளுக்கான உத்தேச தீர்வுகள் அடங்கிய அறிக்கையை தயாரிக்க அமைச்சரவை அனுமதியுடன் கூடிய குழுவொன்று அமைச்சின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்டது. அக்குழுவினால் எல்லைகளுடன் ஒத்துப்போகாத நிர்வான மாவட்ட மற்றும் பொலிஸ் அதிகார எல்லைகள் அடையாளம் காணப்பட்டு அதற்கான தீர்வுகளுடனான அறிக்கை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளதுடன் அந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்குத் தேவையான மேலதிக பணிகள் இலங்கை பொலிஸுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **சமூக பொலிஸ் எண்ணக்கருவிற்கமைய புதிய பொலிஸ் நிலையங்கள் மற்றும் காவலரண்களை நிறுவி….**

ஒழுக்கமான, சட்டரீதியான மற்றும் நல்லொழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதை யதார்த்தமாக்க பொலிஸ் சேவைகளை மிகவும் திறமையாக வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, சமூக பொலிஸ் எண்ணக்கரு புதியதொரு வடிவத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. 2021 வரை 494 பொலிஸ் நிலையங்களானதோடு 205 புதிய பொலிஸ் நிலையங்களையும் 119 காவல் சோதனைச் சாவடிகளையும் நிறுவ சட்டரீதியான ஒப்புதல் பெறப்பட்டது. அவற்றில் 113 பொலிஸ் நிலையங்கள் மற்றும் 29 காவல் சோதனைச் சாவடிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி தற்போது நாடு முழுவதும் 607 பொலிஸ் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

- **அந்த இடத்திலேயே உடனடி தண்டப்பணத்தை அறவிடுவதற்காக…**

சாரதிகளுக்கு ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்காக சாரதிகளுக்கு பாதகமான புள்ளி வழங்கும் முறை மற்றும் போக்குவரத்து வீதி சட்டங்களை மீறும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தப்படாத தவறுகளுக்கு உடனடியாக தண்டப் பணத்தை அறவிடும் விரிவான ஒருங்கிணைந்த இலத்திரனியல் தீர்வை அமுல்படுத்துவதற்காக ஸ்ரீ லங்கா பொலீஸ், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் மற்றும் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து 03 கட்டங்களின் கீழ் அரசாங்க அங்கீகாரம் பெற்ற கொள்முதல் செயல்முறையின் மூலம் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் அமைச்சரவை தீரமான இலக்கம் 23/0472/626/004-I மற்றும் 18.04.2023 திகதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் செயல்முறையின் மூலம் திட்டத்தை செயல்படுத்த பொருத்தமான நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பங்களிப்போடு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகிறது.

- **போதைப்பொருள் அழிப்பதற்கான ஐஉெைநெசயவழச இயந்திரமொன்றை நிறுவுதல்…**

கைது செய்யப்பட்டு அழிப்பதற்கு நீதிமன்ற உத்தரவுகள் விடுக்கப்பட்டுள்ள போதைப்பொருட்களை அழிப்பதன் தேசிய முக்கியத்துவத்தை கருதி அதற்காக அமைச்சு தலையிட்டு வருகின்றது. இதற்காக பயன்படுத்தப்படும் இயந்திரத்தை (ஐஉெைநெசயவழச) அமைப்பதற்கு வனாத்தவில்லுவ லாக்டோவத்தை காணி தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை பொலிஸ், இலங்கை கடற்படை, விசேட அதிரடிப்படை ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்போடு போதைப்பொருள் அகற்றலை மேற்கொள்ள கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணிகள் மற்றும் ஐஉெைநெசயவழச இயந்திரத்தை கொள்வனவு செய்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **சேவையை கைவிட்டுச் சென்ற அலுவலர்களை மீண்டும் சேவையில் இணைத்து…**

அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் ஸ்ரீ லங்கா பொலீஸ் மற்றும் விஷேட அதிரடிப்படையில் சேவையை கைவிட்டுச் சென்றமைக்கான உத்தரவு கிடைத்துள்ள 2,297 பொலீஸ் அலுவலர்களில் 1,039 அலுவலர்கள் நேர்முக தேர்வுக்கு முன்நிலைப்படுத்தப்பட்டு அதிலிருந்து தகைமை பெற்ற 910 பேர் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர். 62 அலுவலர்களை நான்காம் கட்டமாக மீண்டும் சேவையில் இணைப்பதற்றுவதற்காக விதந்துரை செய்து, பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்காக செயலாளரால் அனுப்பப்பட்டுள்ளது.

- **பணியின் போது இறந்த அலுவலர்களின் சார்ந்திருப்பவர்களுக்கு மற்றும் ஊனமுற்ற ஓய்வூதியதாரர்களுக்கு நிவாரணம் வழங்குதல்..**

சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு பணியில் ஈடுபடும் வேளையில் மரணத்திற்கு அல்லது நிரந்தரமாக இயலாமை நிலமைக்கு உள்ளாகிய பாதுகாப்பு படையினருக்கு விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ள பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் போது பாதிக்கப்பட்ட பொலிஸ் உபசேவையில் இருக்கும் போது நிரந்தர சேவையில் உள்வாங்கப்படுவதற்கு முன்னர் நிரந்தரமாக இயலாமை நிலமைக்கு உள்ளான உத்தியோகத்தர்களுக்கு விதவைஃதபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் கீழ் 10 வருடங்களுக்கு மேல் மற்றும் 15 வருடங்களுக்கும் குறைவான சேவையை பூர்த்தி செய்து பயங்கரவாதச் செயல்களால் அங்கவீனமடைந்து மருத்துவ காரணங்களுக்காக ஓய்வு பெற்ற 05 அதிகாரிகளுக்கும் உரிமைகள் வழங்கப்பட்டன.

அவ்வேளையில் நிரந்தர பொலிஸ் சேவையில் உள்வாங்கப்படாத பயங்கரவாதச் செயல்களாலும் இயற்கைப் பேரிடர்களாலும் விதவைஃதபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பை பெறாமல் இறந்த 34 துணைப் பணி அதிகாரிகளின் சார்ந்தோருக்கு ஓய்வூதியப் பங்களிப்பு உரிமைகளை வழங்குவதற்கு 09.08.2023 திகதி அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் ஒப்புதல் பெறப்பட்டது.

- **ஸ்ரீ லங்கா பொலீஸின் குறிப்பிட்ட பிரிவுகளுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல்...**

ஸ்ரீ லங்கா பொலீஸ் நாட்டின் பாதுகாப்புத் துறையில் மிகவும் தனித்துவமான நிறுவனங்களில் ஒன்றாகும். சட்ட ஒழுங்கை பேணுதல், தேசிய பாதுகாப்பை நிலைநாட்டுதல், பிரமுகர் பாதுகாப்பு, புலனாய்வு தகவல்கள் பெறுதல், விசாரணைகளை நடத்துதல், போக்குவரத்தை கட்டுப்படுத்துதல், குற்றச்செயல்களுக்கு எதிராக போராடுதல் மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துதல் என்பன இலங்கை பொலிஸின் முன்னணி பணிகளாகும். அந்த பணிகளில் ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் பிரமுகர் பாதுகாப்பு பிரிவு, பிரதமரின் பாதுகாப்பு பிரிவு, அமைச்சரின் பாதுகாப்பு பிரிவு, பொலீஸ் விசேட அதிரடிப்படை மற்றும் அரச புலனாய்வு சேவை போன்ற பிரிவுகளில் இணைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு அவர்களின் சிறப்புப் பணிக்காக அடிப்படை சம்பளத்தில; 1/3 விசேட கொடுப்பனவு வழங்கப்படும். அத்துடன் குற்ற விசாரணை, போதைப்பொருள் கடத்தலை ஒடுக்குதல், பொதுப் போராட்டம், ஆர்ப்பாட்டங்கள், கலவரங்களை ஒடுக்குதல், புலனாய்வுத் தகவல்களைப் பெறுதல், இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட விசாரணை நடத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் பிரிவுகளுக்கு அவர்கள் மேற்கொள்ளும் விசேட பணிகளை கருத்திட் கொண்டு அடிப்படைச் சம்பளத்தில் ¼ கொடுப்பனவை வழங்க 2023.09.20 திகதி அமைச்சரவை அனுமதிக்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1.2.1. பொதுமக்களின் குறைகளை விரைவாக தீர்த்துவைப்பதற்காக…

- **118 அவசர அழைப்பு சேவை**

பொது பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை பெறுதல் 2014 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 118 செயற்பாட்டு அறையின் அடிப்படை குறிக்கோள் ஆகும். அதற்கு மேலதிகமாக முப்படை, பொலீஸ் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் அலுவலர்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் விரைவான புலனாய்வு மேற்கொள்வதற்கும், போதைப்பொருள் தொடர்பான தகவல்கள் மற்றும் பாதாள உலக செயற்பாடுகள் போன்ற தகவல்களை பெறுதலும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன், சமகால பொதுமக்கள் முறைப்பாடுகள், யோசனைகள், குற்றச்சாட்டுக்கள், மனக்குறைகளை முன்வைப்பதற்காக அமைச்சு, ஸ்ரீலங்கா பொலீஸூடன் இணைந்து சில முறைமைகளைப் பின்பற்றுகிறது. அதன் கீழ் அமைச்சின் 118 தொலைபேசி இலக்கத்தின் மூலம் உடனடியாக முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளக்கூடிய அவசர அழைப்பு சேவை 24 மணிநேரமும் இயங்குகிறது. அதன் மூலம் கடந்த 9 மாத காலத்தில் கிடைத்த 70,491 முறைப்பாடுகளை தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வருடம் அவசர அழைப்பு நிலையத்தினால் மிகச் சிறப்பான சேவைகளை பொதுமக்களுக்கு வழங்க கட்டமைப்பு இற்றைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. 118 தேசிய சேவை செயற்பாட்டு அவசர அழைப்பு மற்றும் பொதுமக்கள் முறைப்பாட்டு அறை புதிய தொழில்நுட்பத்தை உள்ளீர்த்து 24 மணித்தியாலம் முழுவதும் செயற்படும் அவசர அழைப்பு மற்றும் பொது மக்கள் முறைப்பாட்டு அலகு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் நேரடி மேற்பார்வையில் அமைச்சு வளாகத்தில் இயங்கிவருகிறது.

- **பொலீஸ் மற்றும் பொது மக்களின் மனக்குறைகளை விசாரிப்பதற்கான தின செயற்பாட்டின் முன்னேற்றம்…**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மூலம் செயற்படுத்த தாமதமான அல்லது அமுல்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பில் நிவாரணம் வழங்குதல், அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்காக மக்களுக்கு வாய்ப்பு வழங்கி, கௌரவ அமைச்சரின் தலைமையில் அமைச்சு செயலாளர், அமைச்சு அலுவலர்கள் மற்றும் ஸ்ரீலங்கா பொலீஸ் உள்ளிட்ட அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சிரேஷ்ட அலுவலர்களுடன் இணைந்து 2023.01.01 ஆம் திகதியிலிருந்து 2023.09.30 ஆம் திகதி வரை ஒவ்வொரு புதன்கிழமையிலும் நிகழ்நிலை முறையில் பொது மக்கள் தினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கு பொலீஸ் அலுவலர்களால் முன்வைக்கப்பட்ட 2,236 மேன்முறையீடுகள் மற்றும் மனக்குறைகள், பொது மக்களால் முன்வைக்கப்பட்ட 696 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றில் 1,113 முறைபாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது. 39 முறைபாடுகளுக்கு முறைப்பாட்டாளர்கள் பங்குப்பற்றாத அதேவேளை 314 முறைபாடுகள் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

## 1.2.2 அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்பார்வை செய்து…

வருடாந்தம் மேற்கொள்ளப்படும் மூலதன நிதி ஒதுக்கீடுகளில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றத்தை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்வதற்கான கூட்டங்கள் நடத்தப்பட்டன. குறிப்பாக நிர்மாணங்கள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்யும் திட்டங்களில் பிரச்சினைகள் தோன்றும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய தரப்பினரை அழைத்து, அந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே ஒந்ததாரர்களின் வினைத்திறன் இன்மை காரணமாக திட்டங்களின் அமுலாக்கம் சீர்குலைந்து போன திட்டங்கள் தொடர்பான வெளிக்கள அவதானிப்பு சுற்றுலா மேற்கொண்டு தேவையான சீராக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் அமைச்சின் நோக்கத்தை விரிவுபடுத்தும் வகையில் பல புதிய நிறுவனங்கள் அமைச்சுக்கு சேர்க்கப்பட்டன. இதன்படி அமைச்சுக்குரிய அனைத்து நிறுவனங்களையும் அழைத்து அமைச்சுக்களில் முன்னேற்ற மீளாய்வு நடத்துவதற்குப் பதிலாக அமைச்சு நிறுவனங்களின் வளாகங்களுக்குச் சென்று புதிய முறையில் முன்னேற்ற மீளாய்வை நடத்தியது. இதன் மூலம் நிறுவனங்களின் நிர்வாக விவகாரங்களைக் கவனிக்கும் வாய்ப்பையும் பெற முடிந்தது. இந்த முறை மிகவும் பயனுள்ளதாகவும் நடைமுறை ரீதியாகவும் இருப்பதால் இந்த முறையைப் பயன்படுத்தி முன்னேற்ற மதிப்பாய்வைத் தொடர முடிவு செய்யப்பட்டது.





- **அமைச்சின் உள்ளக கணக்காய்வு திட்டத்தை செயல்படுத்துதல்....**
  - வருடாந்த செயற்திட்டம் மற்றும் கொள்முதல் திட்டம் மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் போன்றவற்றின் முன்னேற்றம் உட்பட அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அமுலாக்கம் மற்றும் கண்காணிப்பதற்கு தேவையான கணக்காய்வு நடவடிக்கைகளை உள்ளக கணக்காய்வு பிரிவு எடுத்துள்ளது. தயாரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டத்தின்படி முதல் மற்றும் இரண்டாம் காலாண்டுகளுக்கான அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதன்படி 2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டத்தில் 75மூ ஐ மூன்றாம் காலாண்டில் நிறைவு செய்ய முடிந்தது.

  - நிறுவன உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை வலுப்படுத்த அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் முற்பண பி கணக்கு, பொது வைப்பு கணக்கு, சொத்து முகாமைத்துவம், பண்டகசாலை ஆய்வு, வரடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு, சரக்கு அகற்றல், சரக்கு கட்டுப்பாடு, வருடாந்த செயல் திட்டம், திட்ட முன்னேற்ற ஆய்வு, தனிப்பட்ட கோப்பு பராமரிப்பு, விடுமுறை மற்றும் வாகன பராமரிப்பு, அமைச்சின் இணையதளம் ஆகிய துறைகளில் குறித்த காலத்தில் கணக்காய்வு நடத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் கணக்காய்வு வினவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

- மேலும் மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் விசேட அதிரடிப்படையின் கொடுப்பனவு வவுச்சர்களின் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டுக்கான தேசிய சபையின் கீழ் தலைமையக கணக்காய்வு மற்றும் காலி புனர்வாழ்வு நிலையத்தின் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகத்தின் அரச சார்பற்ற நிறுவன பதிவு தொடர்பாகவும், நிதி மற்றும் பிற துறைகளில் முறைகேடுகள், ஆண்டுத் திட்டங்கள், முன்னேற்ற மதிப்பாய்வு மற்றும் நுண்நிதி கடன்கள் தொடர்பான கணக்காய்வு வினவல் அனுப்பப்பட்டுள்ளது. ஆட்கள் பதிவுத் திணைக்களம் தொடர்பான இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை திட்டம் தொடர்பாகவும் ஒரு கணக்காய்வு வினவல் அனுப்பப்பட்டுள்ளது.

## 1.2.3 பரஸ்பர ஒத்துழைப்பை பெற்று…

தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு கௌரவ அமைச்சர் அப்பதவியை ஏற்ற பின்னர் முதலாவதாக அது தொடர்பான காத்திரமான பொறுப்பு மற்றும் பணியை நிறைவேற்றுவதற்காக பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்காக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் பரஸ்பர ஒருங்கிணைப்புக்கு தேவையான அமைச்சுக்களின் அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது.

- **வெளிநாடுகளுடன் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன்…**

  சட்ட அமலாக்கம், பயிற்சி வகுப்புகள், தகவல் வசதிகள், பரிமாற்றம், தொழில்நுட்ப கருவிகள் மற்றும் ஆலோசனைகளை பெறுதல், சட்டவிரோதமாக வெளிநாடுகளில் வசிக்கும் பிரஜைகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புதல் போன்றவற்றிற்காக அமைச்சு இலங்கை அரசாங்கத்திற்கும் வெளிநாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

- **மனித கடத்தல் தொடர்பான…**

  மனித கடத்தலை ஒழிப்பதற்கான உள்ளூர் செயலணியில் முக்கிய பங்குதாரராக அமைச்சு செயற்படுவதுடன் ஸ்ரீ லங்கா பொலிஸின் மனித கடத்தல் கடல்சார் குற்ற விசாரணைப் பிரிவிற்கு தேவையான ஆதரவை வழங்குவதன் மூலம் மனித கடத்தலை தடுப்பதற்கு செயற்பட்டு வருகின்றது.

  மேலும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முதன்மையில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் திரு.அந்தோனி பிளிங்கன் தலைமையில் செயற்கை போதைப்பொருள் தடுப்பு தொடர்பான சர்வதேச மாநாடு நிகழ்நிலை முறையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, இஸ்ரேல், ஜெர்மனி, இத்தாலி, அர்ஜென்டினா, பெல்ஜியம், கனடா, அவுஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, கொரியா உள்ளிட்ட ஏராளமான நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் இராஜதந்திர அதிகாரிகள் கலந்து கொண்டனர். இலங்கையின் சார்பில் அமைச்சர் டிரான் அலஸ் கலந்து கொண்டார். செயற்கை போதைப்பொருள் உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஒடுக்குவதற்கு உலகின் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் சர்வதேச ஒருமித்த கருத்தை எட்டுவதே இதன் நோக்கமாகும்.



- இலங்கை இராஜதந்திர உறவுகள் பற்றிய கலந்துரையாடல்கள் பிரான்ஸ் தூதுவர் திரு. ஜொங்ப்ரேன்சுவா பெக்தே மற்றும் கௌரவ பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் திரு. டிரான் அலஸ் அவர்களுக்கும் இடையில் இடம்பெற்றன. அந்த உறவுகளை மேலும் வலுப்படுத்த தனது பூரண ஆதரவை வழங்குவதாக பிரான்ஸ் தூதுவர் திரு ஜொங்ப்ரேன்சுவா பெக்தே தெரிவித்துள்ளார். பிரான்ஸ் தீவுகளுக்குள் இலங்கையர்கள் சட்டவிரோதமாக குடியேறி வருவதை தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

- இலங்கைக்கான சுவிஸ்லாந்து தூதுவர் திரு. டொமினிக் பெர்க்லர் மற்றும் கௌரவ அமைச்சர் திரு. டிரான் அலஸ் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. அங்கு சுவிஸ்லாந்து தூதுவர் திரு. டொமினிக் பெர்க்லர் அவர்கள் இலங்கை பொலிஸாரை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு ஆதரவளிப்பதற்கு ஒப்புக்கொண்டார்.

  

  மேலும், சுவிஸ்லாந்து தூதுவர் மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நிறுவுவதன் முக்கியத்துவம் குறித்தும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார், மேலும் உண்மை ஆணைக்குழு ஒருதலைப்பட்சமாக இருக்கக் கூடாது என கௌரவ பொது பாதுகாப்பு அமைச்சர் திரு.டிரான் அலஸ் அவர்கள் முன்மொழிந்தார்.



- இலங்கைக்கான இந்தோனேசிய உயர்ஸ்தானிகர் திருமதி தேவி குஸ்டினா டோபிங் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் திரு.டிரான் அலஸ் ஆகியோருக்கிடையில் சிநேகபூர்வ சந்திப்பொன்று இடம்பெற்றது. இலங்கைக்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. எதிர்காலத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கும், தேவைப்படும் போதெல்லாம் இலங்கைக்கு தனது நாட்டின் ஆதரவை வழங்குவதற்கும் உயர்ஸ்தானிகர் ஒப்புக்கொண்டார்.

- இலங்கைக்கான இத்தாலிய தூதுவர் திரு டாமியானோ பிராங்கோவிஹ் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் திரு டிரான் அலஸ் ஆகியோருக்கு இடையில் இருதரப்பு இராஜதந்திர உறவுகள் குறித்து கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இத்தாலியின் உள்துறை அமைச்சு ஆகியவற்றுடன் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.



## 1.3. நிதி முன்னேற்றம்

2023 ஆம் ஆண்டுக்காக அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அளவு மற்றும் ஆண்டின் 03 முதல் காலாண்டுகளில் அமைச்சின் கருமங்களுக்காக கிடைத்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகளின் சராம்சம்.

**அமைச்சின் நிதி முன்னேற்றம்**

புள்ளிவிபர அட்டவணை **- 01**

| நிறுவனம் | 2023 நிதி ஒதுக்கீடு (ரூ) | | 2023.09.30 வரை செலவு (ரூ) | | செலவு விகிதம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | மீண்டெழும் | மூலதன | மீண்டெழும் | மூலதன | மீண்டெழும் | மூலதன |
| பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு செயற்றிட்டம் 01 | 47,400,000.00 | 4,050,000.00 | 28,877,676.48 | 2,820,740.00 | 61% | 70% |
| பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு செயற்றிட்டம் 02 | 278,100,000.00 | 3,950,000.00 | 203,289,381.61 | 1,955,351.21 | 73% | 50% |

## 1.4. அமைச்சின் இடைக்கால இலக்கு

- பொலிஸ் தலைமையகத்தை பொருத்தமான இடத்தில் நிறுவுவதற்கும், இலங்கை பொலிஸுக்கு தேவையான கட்டிடங்கள், பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்குவதற்கும் கொள்கை முடிவுகளை எடுத்தல், அதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்தல்.

- பொலிஸ் உத்தியோகத்தர் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்றுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தேவையான மனித வளங்களை வழங்குவதற்கும் வசதி செய்தல்.

- வீதி விபத்துக்களை குறைப்பதற்கு புதிய தொழில்நுட்பத்துடன் இலங்கை காவல்துறையின் போக்குவரத்து பிரிவை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு கடவுச்சீட்டுகளைச் செயலாக்குவதற்கும், சர்வதேச தரத்தில் விசாக்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமைகளை வழங்குவதற்கும் அதிகாரமளித்தல்.

- இலங்கைக்கான தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டையை வழங்குவதற்கு ஆட்கள் பதிவு திணைக்களத்திற்கு அதிகாரமளித்தல்.

- போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் ஆபத்தான மருந்துகளின் துஷ்பிரயோகத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அபாயகரமான ஔடத தேசிய கட்டுப்பாட்டு சபைக்கு அதிகாரமளித்தல்.

- அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தை ஒரு வலுவான நிறுவனமாக உருவாக்கி அதன் மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்தல்.

# 02. அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

**i.** ஸ்ரீ லங்கா பொலீஸ்
**ii.** விசேட அதிரடிப்படை
**iii.** குடிவரவு, குடியகல்வு திணைக்களம்
**iv.** ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களம்
**v.** அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகம்
**vi.** ஆபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு சபை

## 2.1. ஸ்ரீ லங்கா பொலீஸ்

### 2.1.1. அறிமுகம்

1865 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பொலீஸ் கட்டளைச் சட்டத்துக்கு அமைய பிரித்தானியர்களின் ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்ட சேவைகளை பொது மக்களுக்கு வழங்குவதற்காக 1866 செப்டெம்பர் மாதம் 03 ஆம் திகதி பொலீஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து தற்போது வரை 154 ஆண்டுகளுக்கு கூடதலான காலம் ஸ்ரீ லங்கா பொலீஸ் “நாட்டின் சட்டம் மற்றும் சமாதானம்” பாதுகாத்து பேணுவதற்காக காத்திரமான பொறுப்பை நிறைவேற்றி வருகிறது.

மக்கள் வாழ்க்கையின் அனைத்து துறைகளுக்கும் பாதுகாப்பை உறுதிசெய்து, சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முதன்மையான பொறுப்பு ஸ்ரீ லங்கா பொலீஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சமூக சமாதானம் மற்றும் நல்லிருப்பை அடிப்படையாகக் கொண்ட குற்றத் தடுப்பு மற்றும் ஒடுக்குதல், போதைப்பொருள் தொல்லையை ஒடுக்குதல், ஊழல் ஒழிப்பு, வாகனக் கட்டுப்படுத்தல், சுற்றாடல் பாதுகாப்பு, அனர்த்த வேளைகளில் மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் பிரமுகர்கள் பாதுகாப்பு ஆகிய பிரதான பணிப்பொறுப்புகள் பொலீஸின் விடயப்பரப்புக்கு உரியவையாகும்.

மேற்குறித்த பணிப் பொறுப்புகளை நாடு முழுவதும் அமுல்படுத்தவதற்காக நாளின் 24 மணித்தியாலமும் கடமையில் ஈடுபடும் மேற்பார்வை தரம், பரிசோதகர் தரம் மற்றும் கனிஸ்ட தரம் ஆகிய தரங்களைக் கொண்ட 90,000 பேருக்கு கூடுதலான பொலிஸ் அலுவலர்கள் சேவையில் ஈடுபடுகின்றனர். இந்த அலுவலர்கள் சாதாரண சேவை, உதவிச் சேவை மற்றும் விஷேட அதிரடிப்படை என்ற வகையில் விஷேட கருமங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக 4000 இற்கு மேற்பட்ட சிவில் அலுவலர்களும், ஸ்ரீ லங்கா பொலீஸின் கருமங்களுக்காக உதவி வழங்கி கடமை மேற்கொள்கின்றனர்.

156 ஆண்டு கால வரலாற்று முக்கியத்துவமான பணியில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ லங்கா பொலீஸ் தற்போது மிகவும் பரந்த பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக பொது மக்களுடன் மிகவும் நெருக்கமாக, நாடு முழுவதும் 607 க்கு கூடுதலான பொலீஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக 45 பிராந்திய பிரிவுகள் மற்றும் 81 செயற்பாட்டு பிரிவுகளை கொண்ட கட்டமைக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பின் மூலம் ஸ்ரீ லங்கா பொலீஸ் சேவை நிறைவேற்றப்படுகிறது.

## 2.1.2. ஸ்ரீ லங்கா பொலீஸின் காலாண்டு ரீதியான முன்னேற்றம்

“நாட்டின் சட்டம் மற்றும் சமாதானம்” பாதுகாத்து பராமரித்துக் கொண்டு சமூக அமைதிக்கு அடிப்படையான நாட்டின் குற்றத்தடுப்பு மற்றும் ஒடுக்குமுறை, போதைப்பொருள் அச்சுறுத்தல், ஊழல் எதிர்ப்பு, போக்குவரத்து கட்டுப்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அனர்த்த சூழ்நிலை மற்றும் பிரமுகர்கள் பாதுகாப்பு ஆகியவை ஸ்ரீ லங்கா பொலீஸின் முக்கிய பணிகளாகும். இதுதவிர தடைநீக்கச் சான்றிதழ் வழங்கல் பொதுமக்களுக்கு மிகவும் நெருக்கமான 119 அவசர அழைப்புச் சேவை மூலம் பொதுமக்களின் புகார்களுக்கு உடனுக்குடன் பதில் அளிக்கும் சேவைகள் இடம்பெறுவதுடன் அதன் மூலம் காவல்துறை சேவைகளை மிக விரைவாக மக்களிடம் கொண்டு சேர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய அனைத்து காவல் நிலையங்களும், தலைமையக காவல் நிலையங்கள் மற்றும் சாதாரண காவல் நிலையங்கள் என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு காவல் நிலையமும் வெவ்வேறு நிலைகளின் கீழ் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, யு1 தரத்தில் 82 காவல் நிலையங்களும், யு2 தரத்தைச் சேர்ந்த 103 காவல் நிலையங்களும், யு3 தரத்தைச் சேர்ந்த 142 காவல் நிலையங்களும், 152 ட தர காவல் நிலையங்களும், 74 ஊ தர காவல் நிலையங்களும், 54 னு தர காவல் நிலையங்களும் என மொத்தம் 607 காவல் நிலையங்கள் 2023.09.30 திகதி தரப்படுத்தப்பட்டுள்ளன. தலைமையகக் காவல் நிலையத்திற்குப் பொறுப்பாளராக ஒரு தலைமைப் பொலிஸ் பரிசோதகரும், ஏனைய பொலிஸ் நிலையங்களுக்குப் பொறுப்பான ஒரு நிலையத் பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டு அவர்களுக்கு கீழ் பணிபுரியும் பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் சார்ஜன்ட்கள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஊடாக பொதுமக்களுக்கு நேரடியாக பொலிஸ் சேவைகளை வழங்குகின்றனர்.

